பாதாள சாக்கடைத் திட்டம் – காஞ்சிபுரம் [illegible]ண்ணா நகர் மனைப்பிரிவு வார்டு எண் 1, பிளாக் எண் 5 நகரளவு எண் 238/ 3ஏ, 3சி மற்றும் 238/2 – அறிவிப்பு செய்யப்படாத சிறுவர் பூங்காவிற்கென ஒதுக்கப்பட்ட இடத்தின் ஒரு பகுதி 57.46 சதுர மீட்டர் பரப்பளவுள்ள இடத்தில் கழிவு நீரேற்று நிலையம் அமைக்க ஒதுக்கீடு செய்ய அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி5) துறை

அரசாணை (நிலை) எண் 50 நாள்:6.4.2007

படிக்க:

1) அரசாணை (3டி) எண் 31 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 18.8.2004
2) நகர் ஊரமைப்பு இயக்குநர் கடிதம் எண் 21600/2006/எல் எ2 நாள் 9.11.2006
3) நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் எண் 961/06/ டிபி3 நாள் 20.2.2007.

*****

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட அரசாணையில் காஞ்சிபுரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த ரூ.12,59,92,000/– நிர்வாகஅனுமதி அளித்து பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

2. காஞ்சிபுரம் நகராட்சியின் சின்ன காஞ்சிபுரம், பெரியார் தோட்டம் கிராமத்தின் அறிஞர் அண்ணா நகரில் அமைந்துள்ள நில அளவை எண்கள் 238/ 3ஏ, 3சி மற்றும் 238/2 ஆகிய புலங்களில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு கழிவு நீரேற்று நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக் கழிவு நீரேற்று நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இடமானது காஞ்சிபுரம் வீட்டு வசதி கூட்டுறவு சங்கத்தால் பூங்காவிற்கென தானமாக கொடுக்கப்பட்ட மொத்தமுள்ள 1010 சதுர மீட்டர் இடத்தில், 5.69 சதவீதமான 57.46 சதுர மீட்டர் இடம் மட்டுமேயாகும் என்றும், மேற்படி இடம் தமிழ்நாடு பூங்காக்கள், விளையாடுமிடங்கள் (ம) திறவிடப்பகுதிகள் (பாதுகாத்தல் (ம) முறைபடுத்துதல்) சட்டம் 1959ன் படி அறிவிப்புச் செய்யப்படாத பகுதியாகும். இந்நிலையில் சிறுவர் பூங்காவிற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் கழிவு நீரேற்று நிலையம் அமைப்பதை எதிர்த்து திருமதி எம். பாக்கியலட்சுமி என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் 3907/2006ல் வழக்கு தொடுத்தார் இவ்வழக்கின் 24.8.2006ம் நாளிட்ட சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பில் தினசரி நாளிதழ்கள் மூலம் பொது மக்களுக்கு அறிவிப்பு செய்யப்பட்டு அதன் பேரில் பெறப்பட்ட ஆட்சேபணைகள் மற்றும் கருத்துக்களின் அடிப்படையில் அரசின் அனுமதி கோருமாறு தீர்ப்பு வழங்கி வழக்கினை தள்ளுபடி செய்தது. அதன் அடிப்படையில் நகராட்சி இக்கழிவு நீரேற்று நிலையம் அமைப்பது தொடர்பாக ஆட்சேபணைகள் ஏதேனும் இருப்பின் 15 நாட்களுக்குள் தெரிவிக்குமாறு கால அவகாசம் கொடுத்து தினசரி நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிட்ட பின்னரும் ஆட்சேபணை மற்றும் மறுப்புகள் ஏதும் வழக்கு தொடுத்தவர் உட்பட ஏனையோரிடமிருந்தும் வரப்பெறவில்லை.

3. கழிவு நீரேற்று நிலையம் அமைக்க தேவைப்படும் அனுமதியினை பெற வேண்டி உள்ளூர் திட்ட குழுமத்திற்கு காஞ்சிபுரம் நகராட்சி அனுப்பி வைத்தது. இதன் தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையரின் ஆலோசனைகள் பெற்று முடிவெடுக்கப்படலாம் என

நகராட்சி நிர்வாக ஆணையரின் ஆலோசனைகள் பெற்று முடிவெடுக்கப்படலாம் என உள்ளூர் திட்டக்குழுமம் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளது. காஞ்சிபுரம் நகராட்சி ஆணையர் மேற்குறிப்பிட்ட அனைத்து விவரங்களையும் இணைத்து நகராட்சி நிர்வாக ஆணையருக்கு தனது கருத்துருவினை அனுப்பி வைத்துள்ளார். அதனடிப்படையில் காஞ்சிபுரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தின் ஒரு பகுதியாக அண்ணாநகர் மனைப்பிரிவில் வார்டு 1 பிளாக் 5 நகரளவு எண் 238/ 3ஏ, 3சி மற்றும் 238/2 ஆகியவற்றில் அறிவிப்புச் செய்யப்படாத சிறுவர் பூங்காவிற்கென ஒதுக்கப்பட்ட இடத்தின் ஒரு பகுதியினை கழிவு நீரேற்று நிலையம் கட்ட ஒதுக்கீடு செய்ய கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் அரசின் அனுமதி வேண்டி மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் கருத்துருவினை நகராட்சி நிர்வாக ஆணையர் அரசுக்கு அனுப்பி வைத்துள்ளார்:–

- பிரஸ்தாப இடமானது காஞ்சிபுரம் நகராட்சியின் சொந்த பொறுப்பில் உள்ளது. அதில் ஒரு பகுதி பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான கழிவு நீரேற்று நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது மொத்த பரப்பளவில் அளவில் 5.76 சதவீதமாகும்.
- பூங்காக்கள், விளையாடுமிடங்கள் மற்றும் திறவிடப்பகுதிகள் (பாதுகாப்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1959ன் படி மொத்தமுள்ள 1010 சதுர மீட்டரில் 1/20 பங்கு மட்டுமே (அதாவது 50.50 சதுர மீட்டர்) மேற்படி திட்டத்திற்கு அனுமதிக்கவும் எஞ்சிய பகுதி விளையாடுமிடமாக பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- மேற்படி கழிவு நீரேற்று நிலையம் மாறுபாடில்லாத குறிப்பிட்ட இடத்திலேயே அமையப்பெற்று உள்ளூர் பகுதி வாழ் மக்களின் பயன்பாட்டிற்கு மட்டுமே உரியதாக இருக்கும். இத்திட்டப்பணிகள் அனைத்தும் TWAD, S.S.R.B., MOST, TNDSS & IRC ல் உள்ள வழிமுறைப்படியும் கோட்பாடுகள் படியும் செயல்படுத்தப்படும்.
- அப்பகுதி வாழ் நல வாழ்வு சங்கங்களின் ஆட்சேபணையின்மை மற்றும் பொது மக்களின் சம்மதக் கடிதம் ஆகியவற்றை அளித்துள்ளனர்.

4. மேற்கண்ட சூழ்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதனடிப்படையில் காஞ்சிபுரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தின் ஒரு பகுதியாக காஞ்சிபுரம் நகராட்சியின் சின்ன காஞ்சிபுரம், பெரியார் தோட்டம் கிராமத்தின் அண்ணாநகர் மனைப்பிரிவில் வார்டு 1 பிளாக் 5 நகரளவு எண் 238/ 3ஏ, 3சி மற்றும் 238/2 ஆகியவற்றில் அறிவிப்பு செய்யப்படாத சிறுவர் பூங்காவிற்கென ஒதுக்கப்பட்ட இடத்தின் ஒரு பகுதியான 57.46 சதுர மீட்டர் பரப்புள்ள இடத்தில் கழிவு நீரேற்று நிலையம் கட்ட ஒதுக்கீடு செய்ய அனுமதி அளித்து அரசு இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5
நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை– 2
ஆணையர், காஞ்சிபுரம் நகராட்சி
நகல்: நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (அநமு2) துறை
இகோ/உதிரி நகல்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

அ. மல்லிகா
பிரிவு அலுவலர்